## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வானூர்.

திரு.பொன்வேந்தன், பி.டெக், எம்.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்களால் உறுதி மொழி சட்டம் பிரிவு 105-வது ஏற்பாட்டின்படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | - | திரு. சங்கர் | அசல் வழக்கு எண். | 65/2015 |
| த/பெ. | - | சுப்ரமணி | வா.சா. | 3 |
| கிராமம் | - | | | |
| வட்டம் | - | | | |
| தொழில் | - | | | |

27.10.2025.

**4-ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:**

1. வழக்கு சொத்துகக்ள் ஆதியில் சுப்பன் என்பவருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். அவருக்கு மலையன் என்ற மகன் உண்டுஎன்றால் சரிதான். மலையன் தற்போது இறந்து விட்டார் என்றால் சரிதான். மலையன் என்பவருக்கு முனுசாமி, செங்கேணி, முருகேசன், கோவிந்தராசு ஆகியவர்கள் மகன்கள் என்றால் சரிதான். மலையன் என்பவருக்கு ஆதிலெட்சுமி என்ற மகள் உண்டு என்றால் சரிதான். ஆதிலெட்சுமி என்பவருக்கு அவருடைய சகோதரர்கள் நல்ல முறையில் திருமணம் செய்து வைத்து அவரது கணவர் வீட்டிற்கு சென்று விட்டார் என்றால் சரிதான். ஆதிலெட்சுமி தற்போது உயிருடன் இல்லை என்றால் சரிதான்.

2. வழக்குச் சொத்துக்களை ஆதியில் சுப்பன் அனுபவித்து வந்து அதன் பின்னிட்டு அவரது மகன் மலையன் அனுபவித்து அதன் பின்னிட்டு மலையனின் மகன்களான முனுசாமி, செங்கேணி, முருகேசன், கோவிந்தராசு ஆகியோர்கள் அனுபவித்து வருகின்றனர் என்றால் சரிதான். அதன் பின்னிட்டு முனுசாமி, செங்கேணி, முருகேசன், கோவிந்தராசு ஆகியவர்கள் சொத்துக்களை பாகம் பிரித்துக்கொண்டனர் என்றால் சரிதான். இந்த வழக்கு நிலுவையில் இருக்கும் போது 1-ம் வாதி இறந்துவிட்டார் என்றால் சரிதான். 1-ம் வாதிக்கு இரு மனைவிகள் என்றால் சரிதான். 5-ம் வாதி 1-ம் வாதியின் மகன் என்றால் சரிதான். ஆதிலெட்சுமிக்கு சலேந்திரன், சுசிலா, கன்னியம்மாள் மற்றும் தவமணி ஆகியோர் பிள்ளைகள் என்றால் சரிதான். தவமணி என்பவரின் மகன் தான் 4-ம் பிரதிவாதி தனசேகர் என்றால் சரிதான். ஆதிலெட்சுமியோ, அவரது மக்களான 1 முதல் 4

பிரதிவாதிகளோ வழக்குச் சொத்துக்களை எந்த காலத்திலும் அனுபவித்தது கிடையாது என்றால் சரிதான். வழக்குச் சொத்துக்களை வாதிகள் தான் அனுபவித்து வருகின்றனர் என்றால் சரிதான்.

Taken down by me in the presence of the withess read over to the witness, and admitted by him/her to be correct.

PONVENTHAN D

Digitally signed by PONVENTHAN D
Date: 2025.10.27 16:09:40 +0530

District Munsif

Vanur.